2018 மார்ச் 21]

அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். அதேபோல, தொழில் முனைவோர்கள் சங்கம் குறைந்தபட்சம் 50 ஏக்கர் தனியார் நிலங்களுடன் தொழிற்பேட்டை அமைக்க முன்வந்தால், அதுகுறித்து மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசித்து, சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

ஆடிப்படை வசதிகள்

***4043—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், கரிசல்குளம்பட்டி மற்றும் கிருஷ்ணன்கோவிலிலுள்ள ஆதி திராவிடர் நல மாணவ, மாணவியர் விடுதிகளில் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிவோடும், துணிவோடும், கருணையோடும், திறமையோடும், ஈரமோடும், வீரமோடும் தன்னையே மெய்வருத்தி தரணியை உயர்த்தி, அடுப்பங்கரையில் இருந்த பெண்களை அதிரடிப் படைக்குக் கொண்டுவந்தவர்; தொட்டிலை ஆட்டிய பெண்களை ஆட்சிக் கட்டிலில் அமர வைத்த தனிப் பெருந்தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் புனித அவையில் முழு உருவப் படத்தினைத் திறந்து வைத்து,*

[2018 மார்ச் 21

பெருமைக்குப் பெருமை சேர்த்த மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அண்ணன் அவர்களுக்கும் ஒட்டுமொத்த பெண் குலத்தின் சார்பாக எனது பணிவான நன்றியைப் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களது அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, கரிசல்குளம்பட்டி ஆதி திராவிட மாணவர்கள் விடுதிக்கான சுற்றுச் சுவர் கட்டப்பட்டு, மின்சார இணைப்பு வழங்கப்பட்டு, முறையான வசதிகள் ரூ.3 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று, மாணவியர் விடுதிக்கான தண்ணீர் தொட்டி பழுதுபார்க்கப்பட்டு, ரூ.3.5 இலட்சம் செலவில் பிற வசதிகளோடு சுகாதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கிருஷ்ணன்கோவிலில் உள்ள மாணவர் விடுதியில் தண்ணீர் வசதி மற்றும் பிற மேம்பாட்டுப் பணிகள் ரூ.8 இலட்சம் செலவிலும் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலமாக, கரிசல்குளம்பட்டி மாணவர் விடுதியில் 100 மாணவர்களும், மாணவியர் விடுதியில் 50 மாணவியர்களும், கிருஷ்ணன்கோவில் விடுதியில் 60 மாணவர்களும் பயன்பெறும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை இவ்வரசு கனிவோடு பரிசீலித்து, விடுதிகளை மேம்படுத்தியுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

முற்பகல் 11-05

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்கள் மனதில் நிற்பவர் யார்' என்ற பாடல் வரிகளுக்கேற்ப வாழ்ந்து, மறைந்த தலைவர்கள் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் பாரத ரத்னா, சத்துணவு தந்த சரித்திர நாயகன், நூற்றாண்டு விழா

2018 மார்ச் 21]

நாயகன் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும், 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று தவ வாழ்வு வாழ்ந்து, அல்லும் பகலும் அயராது உழைத்து, தமிழக மக்களுக்காக எண்ணற்ற நலத் திட்டங்களை வகுத்து, அதனைச் சிறப்பாகச் செயல்படுத்தி, இந்த மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனதை விட்டு நீங்காமல் ஒவ்வொருவரின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கும் மறைந்த முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா என்னும் தெய்வத்தையும் முதற்கண் வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச் சென்ற மக்கள் நலப் பணிகளை தமிழக மக்களுக்காகச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு எத்தனை தடைக்கற்கள் வந்தாலும், அந்தத் தடைக்கற்கள் ஒவ்வொன்றையும் தூள்தூளாக்கி, தடைக்கற்களைப் படிக்கற்களாக்கி சிறப்பாக ஆட்சி புரிந்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், அவரோடு இணைந்து சிறப்பாக ஆட்சி புரிந்து சிறப்பான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த எங்கள் மண்ணின் மைந்தர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.

விருதுநகர் மாவட்டத்தில் கழகத்திற்கு எத்தனை சோதனைகள் வந்தாலும், அதையெல்லாம் தகர்த்தெறிந்து சிறப்பாக விருதுநகர் மாவட்டக் கழக நிருவாகிகளையும், தொண்டர்களையும் அரவணைத்து கழகத்தைச் சிறப்பாக வழிநடத்திவரும், என்னைப் போன்ற எளிய தொண்டனையும், மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வைக்குக் கொண்டு சென்று, நான் சட்டமன்ற உறுப்பினராவதற்கு உறுதுணையாக இருந்த விருதுநகர் மாவட்டத்தின் தொண்டர்களின் பாதுகாவலரும், எங்கள் மாவட்ட கழகச் செயலாளரும், பால் வளத் துறை அமைச்சருமான மாண்புமிகு அண்ணன் அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், கரிசல்குளம்பட்டியில் ஆதி திராவிடர் நல விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தண்ணீர் வசதி குறைவாக உள்ளது. அதற்கு கூடுதல் போர்வெல் அமைத்துத் தருவதோடு மட்டுமல்லாமல், அங்குள்ள கழிப்பிடத்தைப் பராமரிப்பு செய்து தர வேண்டும். மேலும், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம்,

கிருஷ்ணன்கோயிலில் உள்ள ஆதி திராவிடர் மாணவர் விடுதியில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு தண்ணீர் வசதியும், கழிப்பிட வசதியும் ஏற்படுத்தித் தருவதோடு, அதனைப் பராமரித்து, புதுப்பித்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை இந்த ஆண்டிலேயே மறுபரிசீலனை செய்து நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள சுந்தரபாண்டியம், ரைட்டடம்பட்டி, வத்திராயிருப்பு ஆகிய இடங்களில் உள்ள ஆதி திராவிட நல விடுதிகளில் சுகாதார வசதியும், குடிநீர் வசதியும் செய்து உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தொகுதி மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதுமுள்ள அனைத்து விடுதிகளும் சென்ற வருடம் பராமரிக்கப்பட்டுள்ளன. அப்படி ஏதேனும் குறைகள் இருந்தால், அந்தக் குறைகளும் இந்த நிதியாண்டிலேயே நிவர்த்தி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதியிலே இருளர் என்று சொல்லக்கூடிய S.T. people அதிகமாக வசிக்கிறார்கள். குறிப்பாக, மதுராந்தகம் தொகுதியில், அச்சிறுபாக்கம் பேரூராட்சியில் கடந்த 6 மாதங்களுக்கு முன்பாக அரசாங்கத்தின் சார்பில் கட்டித் தரப்பட்டிருந்த தொகுப்பு வீடுகள் மிகவும் சீர் குலைந்திருந்தன. அரசின் கவனத்திற்குப் பல்முறை எடுத்துச் சென்றும் சரி செய்யப்படவில்லை. ஒரு வயதான மூதாட்டி, சுவர் இடிந்து விழுந்து இறந்துவிட்டார். இன்னும் அந்த மக்கள் அச்சிறுபாக்கம் சமுதாய நலக் கூடத்தில்தான் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் இதுவரை கட்டித் தரப்படவில்லை. தொகுதியில் இந்த ஊர், அந்த ஊர் என்று அல்ல; பெரும்பாலான ஊர்களில் தொகுப்பு வீடுகள் அனைத்துமே எப்பொழுது விழும் என்று சொல்லக்கூடிய சூழ்நிலையில்தான் இருக்கின்றன. இவை எல்லாம் நம்முடைய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பில் சரி செய்து தரப்படுமா என்று உங்களைப் பணிவோடு, தாழ்மையோடு கேட்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அந்தப் பகுதிகளை எல்லாம் குறிப்பிட்டு எழுதிக் கொடுத்தீர்கள் என்றால், அமைச்சர் அவர்கள் பார்த்துவிடுவார்கள். மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுத்த கோரிக்கையை அவருடைய சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தே செய்துமுடிக்கலாம். இருப்பினும், மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களிடம் அதை எடுத்துச் சென்று, அதற்கான வழிமுறைகள் இருந்தால், அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.